## புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் அவர்களால் புகையிலை மீதான முறையான வரிக் கொள்கையை உருவாக்க முடியுமா?

புகைத்தலால் ஏற்படும் தீமைகள், புகைப்பொருள் நிறுவனங்களின் விளம்பர நுட்பங்கள், புகைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் போன்றவைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதனை நோக்காகக் கொண்டு, ஆண்டுதோறும் மே 31-ஆம் திகதி சர்வதேச புகைத்தல் தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. உலகெங்கிலும் தங்கள் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமையைக் கோருவதற்கும் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதுமே இதன் பிரதான நோக்கமாகும். WHO இன் உறுப்பு நாடுகள் 1987ஆம் ஆண்டில் சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்தை உருவாக்கியது, இது புகைபொருள் சார்ந்த தொற்றாத நோய் மற்றும் தடுக்கக்கூடிய மரணம் மற்றும் இதர நோய்கள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் கவனத்தை ஈர்த்தது.

உலக சுகாதார ஸ்தாபனமானது, 2022ம் ஆண்டிற்கான சர்வதேச புகைத்தல் தடுபபு தினத்திற்கான உலகளாவிய பிரச்சாரத்தை “புகைபொருள் நமது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல்’ என்ற கருப்பொருளின் கீழ் அறிவித்துள்ளது. புகைப்பொருள் உற்பத்திக்கான காடழிப்பு, உற்பத்தியினால் ஏற்படக்கூடிய இதர பிரச்சினைகள், விநியோகம் மற்றும் கழிவுகள் தொடர்பான சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும். புகைப்பொருள் பல அம்சங்களில் தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும், புகையிலை தொழிற்துறையானது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக அதன் நற்பெயரை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கு முயற்சிக்கிறது,

உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி, புகைப்பொருள் பாவனையினால் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 மில்லியன் மக்கள் மரணிக்கின்றனர். புகையிலை பொருட்கள் பாதகமான விளைவுகளை மாத்திரமே ஏற்படுத்துகிறது மற்றும் ஒரு நாட்டிற்குள் சுகாதார பிரச்சினைகளுக்கு பெரிதும் பங்களிக்கின்றன, புகையிலையானது காற்று, நீர் மற்றும் நில மாசுபாட்டின் அடிப்படையில் சுற்றுச்சூழலுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது.

வருடாந்தம் காபன் டைக்சைட் வாயு 84 மெகாடன் வளியில் கலக்கச் செய்வதனால் , புகைபொருள் உற்பத்தியானது பருவநிலை மாற்றத்திற்கு பங்களிக்கிறது மற்றும் காலநிலை மாற்றத்தை குறைக்கிறது, வளங்களை வீணாக்குகிறது. மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை சேதப்படுத்துகிறது. 2020 ஆம் ஆண்டில், சிகரெட் குச்சிகளின் பயன்பாடு 2300 மில்லியனாக பதிவாகியுள்ளது, அதே நேரத்தில் இலங்கையில் கடந்த தசாப்தத்தில் 35,000 மில்லியனுக்கும் அதிகமான சிகரெட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிகரெட் துண்டுகள், உணவுப் பொதிகளுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது அதிக குப்பைகள் நிறைந்த பொருளாக விளங்குகின்றது, மேலும் பல நச்சு இரசாயனங்கள், கன உலோகங்கள் மற்றும் எஞ்சிய நிகோடின் ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் இவை பெரிதும் சூழலுக்கு பாதிப்பை தோற்றுவிக்கின்றது. அவை மிகக் குறைந்த மக்கும் தன்மையும் கொண்டவை. எனவே, சிகரெட் துண்டுகளை முறையற்ற முறையில் ஆங்காங்கே இடுவது பெரும்பாலும் காற்று, நிலம் மற்றும் நீர் மாசுபடுவதற்கு பங்களிக்கிறது. இது கணிசமான சுத்திகரிப்புச் செலவைச் சேர்த்து, நாட்டின் பொருளாதாரத்தில் கூடுதல் சுமையை உருவாக்குகிறது.

இலங்கையின் நடுப்பகுதி மற்றும் வட பகுதிகளின் சாய்வான நிலங்கள் பொதுவாக புகையிலை உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. புகையிலை உற்பத்தியால் கடுமையான மண் அரிப்பு, கீழ்நிலை வண்டல் மற்றும் நீர் ஆதாரங்கள் குறைவதால் நில பயன்பாடு ஆகியவற்றிற்கு செல்வாக்கு செலுத்துகின்றது. ஏனைய பயிர்களுடன் ஒப்பிடும் போது, புகையிலையில் மண் அரிப்பு விகிதம் அதிகமாக உள்ளது. மண்ணின் தரம் குறைவதோடு, அதிக இரசாயனப் பயன்பாட்டினால் சுற்றுச்சூழல் மாசுபடுவது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மற்றொரு அம்சமாகும். மேலும், புகையிலை மண்ணிலிருந்து ஊட்டச்சத்துக்களை விரைவாக உறிஞ்செடுப்பதனால்

மண்ணின் சத்துக்களை குறைக்கிறது. எனவே, புகையிலை உற்பத்தியானது நேரடியாக மண் வளத்தை குறைப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, இதனால் நிலமானது ஏனைய முக்கிய உணவுப் பயிர்களை பயிரிடுவதற்கு ஏற்றதாக அமையாமல் போகின்றது. இதனால் புகையிலை உற்பத்தியானது இலாபம் குறைந்த, மண்வளத்தை சேதமாக்குகின்ற பயிற்சைய்கையாகவே கருதப்படுகிறது.

பயனுள்ள கொள்கை அமுலாக்கத்தின் மூலம் புகையிலை பாவனையை கட்டுப்படுத்துவதில் ஒரு நாடாக இலங்கை வெற்றியடைந்துள்ளது. இதன் விளைவாக கடந்த தசாப்தத்தில் புகையிலை பாவனையானது ஒட்டுமொத்தமாக குறைந்துள்ளது. உலக சுகாதார நிறுவனம் (WHO), புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை (NATA), சுகாதார அமைச்சு மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு உற்பட புள்ளியியல் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் இணைந்து மேற்கொண்ட Global Adult Tobacco Survey (GAT Survey) ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆய்வின் முடிவில் புகைபிடித்தல் 9.1% ஆக குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இலங்கை, குறைந்த புகைப்பொருள் பாவனையில் முன்னணி நாடாக திகழ்கிறது, இது நாட்டிற்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியைக் குறிக்கிறது. இத்தகைய சாதனையுடன், புகைப்பொருள் பயன்பாட்டை மேலும் குறைப்பதற்கும், அதன் மூலம் நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பு மீதான சுமையைக் குறைப்பதற்கும் நமது நாட்டின் மக்கள் தொகையை வலுப்படுத்துவதற்கான கூடுதல் வழிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| புகைத்தல் பாவனை | |
|---|---|
| **புகைத்தல் பாவனை (புகைத்தல்/புகையற்ற)** | **(%)** |
| தற்போது புகையிலை பாவனையில் ஈடுபடுவோர் | 19.4 |
| **புகைத்தல் பாவனை** | |
| தற்போது புகைத்தல் பாவனையில் ஈடுபடுவோர் | 9.1 |
| தினமும் புகைத்தலில் ஈடுபடுவோர் | 6.4 |
| தற்போது சிகரட் புகைப்போரின் வீதம் | 6.2 |
| தினமும் சிகரட் புகைப்போர் | 3.7 |
| தற்போது பீடி புகைப்போரின் வீதம் | 4.9 |
| தினமும் பீடி புகைப்போர் | 3.7 |

*Source: GAT – Global Adult Tobacco Survey (Fact sheet: Sri Lanka 2020)*

இலங்கையில் கணிசமான அளவு குறைந்த புகையிலை பாவனை விகிதங்கள் பதிவாகியுள்ள போதிலும், பல காரணங்களால் மேலும் புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் சிகரெட்டுக்காக நாளாந்தம் சுமார் 40 மில்லியன் ரூபா செலவிடப்படுவதால் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், நிதித்துறையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முக்கியமான கொள்கை தீர்வுகளை அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். புகைப்பொருள் பாவனையாளர்களிடத்தில் பல நோய்களை


ஏற்படுத்துவதால், அது நாட்டின் சுகாதார அமைப்பிலும் தேவையற்ற சுமையை சேர்க்கிறது. மேலும், புகையிலை பொருட்களை முறையற்ற முறையில் அகற்றுவது விரைவான சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துகிறது, மேலும் நாட்டின் பொருளாதாரத்தில் தூய்மைப்படுத்துவதற்கான கணிசமான செலவைச் சேர்க்கிறது. எனவே, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக, புகைபொருள் பயன்பாடு தொடர்பான செலவுகளைக் குறைப்பது ஒரு முக்கிய அம்சமாக அடையாளம் காண முடியும்.

பணவீக்கம் காரணமாக, அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது, ஆனால் புகையிலை உற்பத்திகளின் முக்கிய பொருளான சிகரெட்டின் விலை 8% மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையை பொதுமக்களால் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தாமல், புகையிலைப் பொருட்களுக்கான வரியை மட்டும் அதிகப்படுத்தினால் பெரிய அளவில் வருமானம் கிடைக்கும்.

| பொருட்கள் | 2021 (ரூ) | 2022 (ரூ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| அரிசி (01Kg) | 101 | 211 | 109% |
| கோதுமை மா (01Kg) | 91 | 253 | 175% |
| மைசூர் பருப்பு (01Kg) | 209 | 528 | 153% |
| நெத்தலி (01Kg) | 721 | 1486 | 106% |
| பெற்றோல் (01 L) | 117 | 420 | 250% |
| டீசல் (01 L) | 121 | 400 | 230% |
| ஒரு சிகரட் (கோல்ட் லீப்) | 65 | 70 | 8% |
| சாராயம் ஒரு போத்தல் (750ml) | 1650 | 2030 | 23% |

கடந்த காலங்களில், புகையிலை பாவனையை கட்டுப்படுத்த இலங்கை பல முக்கியமான சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது, வரி அதிகரிப்பு உட்பட, அரசாங்கத்திற்கான குறிப்பிடத்தக்க வருமானத்தை அதிகரிப்பதற்கும் பொதுமக்களுக்கான பொது சுகாதார நலன்களுக்கும் வழிவகுத்தது. 2019 ஆம் ஆண்டு முதல் சிகரெட்டுக்கான வரியை அதிகரிக்க நிதியமைச்சு உட்பட பொறுப்பான தரப்பினர் நடவடிக்கை எடுக்காததால் நாடு மிகவும் நெருக்கடியான காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு ஈட்டக்கூடிய வருமானம் சுமார் 100 பில்லியன் ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து சிகரெட்டுகளுக்கும் (நீளத்தைப் பொருட்படுத்தாமல்) புகையிலை வரியை ரூபா 20 ஆல் அதிகரிப்பதன் மூலம் அரசாங்கம் கிட்டத்தட்ட ரூபா 5 பில்லியனை ஈட்ட முடியும் என்று கொள்கை ஆய்வுகள் நிறுவனம் (IPS) மதிப்பிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், பெரும்பாலான சிகரெட்டுகளுக்கான புகையிலை வரியை அரசாங்கம் உயர்த்தியது. இருப்பினும், இந்தத் திருத்தத்தின் மூலம் மலிவான மற்றும்

மிகவும் தீங்கு விளைவிக்கும் (வடிகட்டப்படாத) சிகரெட்டுகளின் விலை 50% குறைக்கப்பட்டது, பாடசாலை மாணவர்கள் உட்பட எந்தவொரு தனிநபருக்கும் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் விலை குறைக்கப்பட்டது. இந்த செயற்பாடானது அரசாங்கத்தின் வரி வருமானத்தை குறைக்கிறது. மேலும் விலைக் குறைப்பினால் புகைபிடித்தலுக்குப் புதிதாக இளைஞர்கள் பழகக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும், மற்றும் பாவயைும் அதிகரிப்பதனால் அதனுடன் தொடர்புடைய உடல்நலப் பிரச்சினைகளின் அதிகரிப்புக்கும் வழிவகுக்கும்.




*Source: CTC annual reports*

கடந்த 10 ஆண்டுகளில், சிகரெட் குச்சிகளின் உற்பத்தி 45%னால் குறைந்துள்ளது. ஆனால் இலங்கை புகையிலை நிறுவனம் (CTC) ஈட்டிய இலாபம் 121% அதிகரித்துள்ளது. உற்பத்தி அளவு குறையும் போது மற்ற பெரும்பாலான தொழில்கள் இலாப இழப்பை எதிர்கொள்கின்றன, ஆனால் புகையிலை நிறுவனம் உற்பத்தி குறைவடைந்தாலும் இலாபத்தை அடைகின்றது. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, புகையிலை நிறுவனம் பெரும் தொகையை இலாபமாக பெறுகிறது. இதற்கான பிரதான காரணம் புகையிலை தொடர்பான பொருட்களுக்கு முறையான வரி கொள்கை இல்லாததே ஆகும் என தெளிவாக கண்டறியலாம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் செயல்படும் பொறுப்புள்ள அரசாங்க அமைப்பான நிதியமைச்சானது, முறையான வரிக் கொள்கை அமுலாக்கங்களை மேற்கொண்டு அரசுக்கு வருவாயை அதிகரிக்கச் செய்ய வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, கடந்த சில வருடங்களில், நடைமுறைப்படுத்தப்பட்ட உத்திகள் புகையிலை நிறுவனத்திற்கு சாதகமாக இருப்பதை அவதானிக்க முடிந்தது, இதனால் நாட்டிற்கு ஒரு பெரிய வரி வருவாய் இழப்பு ஏற்பட்டது, அதே நேரத்தில் புகையிலை நிறுவனம் இந்த தொகையை இலாபமாக குவித்தது.

செப்டம்பர் 2021 இல் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC) நடத்திய ஆய்வில், பதிலளித்தவர்களில் 89.3% பேர் அரசாங்க வருவாயை மேம்படுத்த புகையிலை வரியை அதிகரிக்கும் நடவடிக்கையை ஆதரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். புகைபிடித்தல் ஒரு ஒரு சமூகத்தின் பொருளாதார நிலைக்கு நேரடியாக தாக்கம் செலுத்துவதனால், விரிவான புகையிலை கட்டுப்பாட்டு உத்திகளில் புகையிலை வரிவிதிப்பு இன்றியமையாத அங்கமாகும். அதிகரித்த

வரித்தொகையால் புகைபொருள் தொடர்பான பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன, இதனால் நுகர்வோருக்கு அது குறைவாகக் கிடைக்கிறது. புகைபிடித்தல் மற்றும் அதன் பாதகமான உடல்நல விளைவுகளையும் குறைக்க இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதிகரித்த வரிவிதிப்பின் மூலம் விலைகளை அதிகரிப்பதன் மூலம் புகையிலை பாவனையை குறைப்பது, புகையிலையால் ஏற்படும் நோய்களை குறைக்கும் மற்றும் இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு முறை மிகவும் சுமையாக உள்ள நேரத்தில் சுகாதார அமைப்பின் மீதான அழுத்தத்தை குறைக்கும். எனவே, இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் செயற்படுத்தப்பட வேண்டிய சிறந்த உத்தி, சிகரெட்டுக்கான வரியை அதிகரித்து அரசாங்கத்திற்கு அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

புதிதாகப் பதவியேற்றுள்ள பிரதமரும் ஏனைய பொறுப்புள்ள நபர்களும் அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டுவதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், புகையிலை பொருட்களுக்கு முறையான வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வர வேண்டும் என்பதை முன்மொழிய விரும்புகிறோம். அதன் மூலம் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு திருப்திகரமான தீர்வு கிடைக்கும் என்பது விஞ்ஞான ரீதியான உண்மை.

**மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்**